


Vol.30 | No. 3| MARCH 2026
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



March 19 - FEAST OF ST.JOSEPH

17 Feb 2026



Adoration and Blessing of Foundation Stone
for Cathedral Soosaipuram



THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 30 No :3 MARCH 2026



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 04 |
| மறைக்கல்வி | 09 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 10 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 11 |
| இல்வாழ்வு இயக்கம் | 13 |
| வின்சென்ட் தே பவுல் | 14 |
| உறவிய மலர் | 16 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 18 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 20 |
| நலவாழ்வு பணிக்குழு | 21 |
| மறைமாவட்ட செய்திகள் | 22 |
| மறைவட்ட செய்திகள் | 25 |
| தென்காசி மறைபரப்புதள செய்திகள் | 34 |
| MONTHLY AGENDA - MARCH 2026 | 35 |
| BISHOP'S ENGAGEMENTS - MARCH 2026 | 37 |

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Thomas Kuzhikodil**

Associate Editor

**Mr. S.M.Edwinson**

Published by:

**Fr. Thomas Kuzhikodil**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Mary Jency V.M**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/179/2026** **28 February 2026**

**Dear Readers,**

**Greetings from Bishop's House, Thuckalay!**

As we enter the month of March and draw near to the solemn celebration of the Paschal Mysteries of our Lord Jesus Christ, I write to you with a heart full of gratitude and pastoral affection.

With joy and heartfelt gratitude to God, on Tuesday, 17 February 2026, the Foundation Stone of our St Joseph Cathedral Church was solemnly blessed and laid at Soosaipuram. We begin this sacred construction not with an abundance of material resources but with an abundance of faith, trusting entirely in Divine Providence. As the Psalmist reminds us, "Unless the Lord builds the house, those who build it labour in vain" (Ps 127:1). It is God who wills this Cathedral, and it is God who will bring it to completion through our prayers, generosity, and willing co-operation. I invite each of you to make this project known to your faithful, to encourage their spiritual and material contributions, and to unite your prayers with ours so that this House of God may rise as a lasting sign of our Eparchy's living faith.

Site preparations are presently in progress at Soosaipuram. The construction of the cathedral is scheduled to commence on March 19th, coinciding with the Feast of St. Joseph. I am grateful for your help. The 'One Day's Salary' collection for the Cathedral was a huge success because of your leadership. This shows the true spirit and love of our community. Thank you.

**St Joseph: Patron, Protector, and Mirror of the Priestly Heart**

March holds a special place for St Joseph, whose Solemnity we celebrate on the 19th. Yet St Joseph is not merely a date on our liturgical calendar — he is the Patron of the Universal Church, the silent guardian of the Body of Christ, and, in a most personal way, the model and companion of every priest. Pope Francis beautifully described him as "the man who goes unnoticed, a daily, discreet, and hidden presence," yet one who played "an incomparable role in the

history of salvation." In this description, we recognise something of our own priestly calling. The Holy Scriptures, though sparing in words about St Joseph, paint a portrait of extraordinary virtue through his actions alone. Not a single word of his is recorded in the Gospels, yet his life speaks volumes about faith, obedience, courage, and selfless love. It is in this wordless eloquence that the priest finds his deepest vocation reflected.

**Humble Obedience:** St Joseph's foremost virtue was his prompt and unconditional obedience to God's will. St Matthew records four divine interventions in his life, each demanding an immediate and costly response. "When Joseph woke from sleep, he did as the angel of the Lord commanded him" (Mt 1:24). This phrase, repeated in various forms throughout the narrative, reveals a man who never questioned, delayed, or negotiated with God. When commanded to flee to Egypt, leaving his livelihood and security, he "rose and took the child and his mother by night" (Mt 2:14) — unhesitatingly, in the darkness. Each act of obedience required surrender: of his reputation, his plans, his comfort, and his security. For the priest, this quality is not merely admirable — it is constitutive. The priest is a man under obedience: to the Gospel, to the Church, to his bishop, and to the pastoral needs of his people. How often, like Joseph, are we called to respond promptly when the hour is inconvenient, the directive unexpected, and the cost real? St Joseph teaches us that authentic priestly obedience flows not from the suppression of the will but from its transformation — from a will that has learnt, through prayer and surrender, to trust utterly in God's Providence even when it cannot see the full picture.

**Faithful Guardianship.** St Joseph was entrusted with the two greatest treasures of heaven — Jesus and Mary. His primary mission was to protect, provide for, and create the conditions in which the Son of God could grow, be formed, and fulfil His salvific mission. He shielded the Holy Family from danger, secured their safety in Egypt, guided their return to Nazareth, and maintained the sacred order of the household of Nazareth. Every priest has been given an analogous charge. The faithful entrusted to him are not his audience but his family — souls whom the Father has placed under his pastoral care. Like Joseph, the priest is called to protect them: to guard the integrity of their faith, shield them from errors that threaten the life of grace, and create within the parish community a sanctuary where Christ can truly dwell.

08/03/2023

**Custodian of Sacred Tradition.** St Joseph was also the guardian of Israel's sacred traditions. He brought the child Jesus to be presented in the Temple, observed the prescriptions of the Law with faithful devotion, and led the Holy Family on the annual pilgrimage to Jerusalem for the Passover. He did not reinvent the faith he had received — he transmitted it with reverence and love. In this, he is a perfect icon of what the priest is called to be in relation to the Church's liturgical and sacramental life. The priest does not possess the liturgy as something personal; he receives it from the Church, celebrates it with devotion, and hands it on faithfully to those in his care. Every Mass offered with reverence, every sacrament celebrated with integrity, and every liturgical tradition preserved and lovingly taught — all of this is the priestly echo of Joseph's faithful custodianship of Israel's holy heritage.

**Righteous Mercy.** There is yet another dimension of St Joseph's greatness that speaks powerfully to the priest: his righteous mercy. When faced with a situation he could not understand, St Joseph refused the path of harsh judgment. Though the Law permitted him to expose Mary, he, being a just man and unwilling to put her to shame, resolved to divorce her quietly (Mt 1:19). His righteousness was not the cold application of a rule but the warm exercise of love. Dear Fathers, how often do our faithful come to us precisely in moments of shame, confusion, and vulnerability? The priest who has contemplated St Joseph knows that justice and mercy are not opposites — they are the two hands of the one pastoral heart. We are called to protect the dignity of every person who crosses the threshold of the confessional, the sacristy, or the presbytery, offering them not condemnation but the possibility of redemption.

**Contemplative Silence.** Perhaps St Joseph's most arresting characteristic is his silence. In a world that prizes noise, self-promotion, and constant communication, his wordless witness challenges us profoundly. He received God's messages in dreams, in the silence of the night, when the world was still, and his heart was attentive. His entire life was one of contemplative action — working with his hands while pondering divine mysteries in his heart. Living with the Incarnate Word Himself, St Joseph maintained a reverent interior stillness, allowing the Word to teach, transform, and work through him. His silence was not emptiness but fullness — filled with wonder, adoration, trust, and love. "Be still and know that I am God"

(Ps 46:10) was St Joseph's daily practice. For the priest, this quality is of immense importance. We live in an age of relentless activity, when the pressure to produce, speak, and be seen can quietly hollow out the priestly heart. St Joseph reminds us that our words must flow from silence, our actions must be rooted in contemplation, and that the most transformative ministry often happens not in the pulpit but in the quiet of prayer, when we allow God to form us before He sends us to form others.

**The Fruitfulness of Hiddenness.** St Joseph performed no public miracles, left no writings, and preached no sermons. Yet he fulfilled the most essential mission — raising the Saviour of the world. The carpenter's workshop in Nazareth was his pulpit; his daily faithfulness was his eloquence. In our age that prizes visibility and measurable impact, St Joseph stands as a quiet rebuke and a quiet consolation. The priest who celebrates Mass faithfully before a small congregation, visits the sick without fanfare, spends long hours in the confessional, and prepares his homilies with care for people who may never offer a word of thanks — this priest is living the vocation of Joseph. His reward is not in human recognition, but in the words he will one day hear: "Well done, good and faithful servant" (Mt 25:21).

**The Great Lent: An Exhortation to Deeper Conversion**

"Return to me with your whole heart, with fasting and weeping and mourning" (Joel 2:12). As we cross the threshold of Great Lent, the Church calls us once again to the threefold discipline of prayer, fasting, and almsgiving — not as burdens imposed from without but as graces offered to those who hunger for God. I exhort you, dear Fathers, to enter this season with renewed personal fervour, for only the priest who thirsts for God can truly lead his faithful to the springs of living water.

Let your prayer deepen during these fifty days: lengthen your time before the Blessed Sacrament, pray the Stations of the Cross with your communities, celebrate the Liturgy of the Hours with greater faithfulness, and encourage your people to frequent the Sacrament of Reconciliation. Let your fasting be genuine — a discipline that truly costs something and opens the heart to solidarity with the poor. And let your almsgiving be generous, teaching your faithful by example that our possessions are not our own but held in trust for those in need. Above all, dear Fathers, be available, patient, and merciful

08/03/2023

during this season. Provide ample opportunities for Confession and be the face of the Father who runs to meet the returning son. This is our Lenten mission as priests — not merely to observe the season but to become, ever more deeply, ministers of the mercy that alone can transform the human heart.

I commend each of you to the loving intercession of St Joseph. May he, who was silent yet faithful, hidden yet indispensable, teach us the beauty of a priesthood wholly given to God and to those entrusted to our care! May this Lent bring each of us — and the whole Eparchy of Thuckalay — ever closer to the Risen Lord we serve!

**CONCLUSION**

We are approaching the end of the academic year. Soon, our students will begin their examinations. The holiday season will then ensue. Let us help our children in whatever way possible to end the academic year on a happy note. I am sure you will plan some programmes, in addition to the ones the Eparchy has planned, during the holidays to keep our young boys and girls usefully occupied.

As we have already noted, we are preparing for the great solemnity of the Resurrection. On the 29th of this month, we will enter Holy Week with the celebration of Palm Sunday. For us believers, death precedes resurrection. Our bodies will undoubtedly perish, but our faith affirms that we will participate in the resurrection of our Saviour. St Paul declares, “All of us who were baptised into Christ Jesus were baptised into his death” (Rom 6:3). Even while living in our bodies, we are called to die. As disciples of the Lord, we are to take up our daily cross (Lk 9:23). Our former selves will be crucified with the Lord (Rom 6:6). We must live as if we have died to sin (Rom 6:2).

Assuring you of my prayers and fraternal closeness, I remain united with you in priestly charity.

Yours devotedly in Christ and St Joseph,

† George Rajendran SDB
Bishop of Thuckalay

BISHOP GEORGE RAJENDRAN sdb · Diocese of Thuckalay




“உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்.”
(மாற் 16:15)

**அறிவிப்பதை கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்பண்டு.**

**(உரோமையர் 10:17)**

## மறைமாவட்ட விவிலிய வினாடி வினாப்போட்டி



2025-26 ஆம் மறைக்கல்வி ஆண்டு வகுப்பு 5 முதல் வகுப்பு 12 வரையுள்ள மாணவர்களுக்கான மறைமாவட்ட அளவிலான விவிலிய வினாடி வினாப்போட்டி 2026 பிப்ரவரி 08, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை படந்தாலுமூடு திரு இருதய மேல்நிலைப் பள்ளியில் வைத்து நடத்தப்பட்டது. பங்களவில் நடைபெற்ற விவிலிய வினாடி வினாப்போட்டியில் முதலிடம் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு பெற்றனர். இப்போட்டியில் 550 மாணவர்கள் பங்கு பெற்றனர்.

1 முதல் 9 ஆம் வகுப்பு மறைக்கல்வி மாணவ மாணவியருக்கு மார்ச் 15 ஆம் தேதி இரண்டாம் பருவப் பொதுத்தேர்வு நடைபெறும்.

**அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற**
**இணை இயக்குனர்**

**அருட்தந்தை அபிலாஷ் சேவியர்**
**இயக்குனர்**

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

**கலைவிழா**

2026 பிப்ரவரி 08, ஞாயிற்றுகிழமை பிற்பகல் 2 மணிக்கு களியல் மற்றும் ஆறுகாணி மறைவட்டங்களுக்கான போட்டிகள் களியல் பள்ளியில் வைத்து நடைபெற்றது. களியல் மறைவட்ட முதன்மை பங்குத்தந்தை பேரருட்தந்தை வர்கீஸ் கோட்டூர் CMI அவர்கள் குத்துவிளக்கேற்றி போட்டிகளைத் தொடங்கி




வைத்தார். அனைத்து பங்கிலுள்ள குழந்தைகளும் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 14 ஆம் தேதி சனிக்கிழமை மற்ற அனைத்து பங்கிலுள்ள குழந்தைகளுக்குப் போட்டிகள் நடைபெற்றன. போட்டிகள் காட்டாத்துறை புனித மிக்கேல் அதிதூதர் பள்ளியில் நடைபெற்றது. பேபரருட்தந்தை ஜோஷி தேவலகர CMI அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் சிறப்புரை வழங்கினார். அனைத்து பங்கிலுள்ள குழந்தைகளும் பங்கேற்று போட்டிகளில் வெற்றி பெற்றனர்.

இயக்குனர்
அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

சீரோ மலபார் இளையோர் இயக்கம் **SMYM**

## அலகு சந்திப்பு

2026 ஜனவரி 25, நடுவண் செயற்குழு உறுப்பினர்களுக்கான கூடுகை கல்லுவிளை SMYM அலுவலகத்தில் நடைபெற்றது. கூடுகையில் எடுத்த முடிவின்படி பிப்ரவரி 01, ஞாயிற்றுகிழமை சூசைபுரம் மறைவட்ட பங்கை சார்ந்த ஆலயங்களான சூசைபுரம், தக்காளிவிளை மற்றும் பாலப்பள்ளம் ஆகிய ஆலயங்களுக்கு சென்று இளையோர்களை பார்வையிட்டோம்.

அடுத்ததாக மாங்கரை ஆலயத்தில் வைத்து பிப்ரவரி 08, ஞாயிற்றுகிழமை மதியம் 1.30 முதல் 3.30 மணிவரை சூசைபுரம் மறைவட்ட சந்திப்பு நடைபெற்றது. அங்கு மறைமாவட்ட முன்னாள் செயலாளர் மற்றும் ஜாய் பல்கலை கழக பேராசிரியர் பபிஷா அவர்களால் வகுப்பு எடுக்கப்பட்டது. தொடர்ந்து சூசைபுரம் மறைவட்ட பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில் மெர்னிஷா அவர்கள் மறைமாவட்ட ஆலோசகராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்றைய தினம் நித்திரவிளை மறைவட்ட பங்கை சார்ந்த ஆலயங்களான வாறுதட்டு மற்றும் வயலிங்கரை ஆகிய ஆலயங்களுக்கு சென்று இளையோர்களை சந்தித்தார்கள். 22 ஆம் தேதி, மதியம் 1.30 முதல் 3.30 மணிவரை நித்திரவிளை மறைவட்ட சந்திப்பு வாறுதட்டு புனித சவேரியார் ஆலயத்தில் நடைபெற்றது.

## நடுவண் செயற்குழு கூடுகை

வாறுதட்டு ஆலயத்தில் வைத்து இளையோர் இயக்கத்தின் நடுவண் செயற்குழு உறுப்பினர்களுக்கான கூடுகை பிப்ரவரி 22 ஆம் தேதி, நடைபெற்றது. அதில் Taize Prayer நடைபெறுவதை பற்றி பேசப்பட்டது. மார்ச் 01 ஆம் தேதி ஞாயிற்றுகிழமை மாலை 3.00 முதல் 5.00 மணி வரை சூசைபுரம் மற்றும் தக்கலை - பிலாங்காலை மறைவட்டங்கள் இணைந்து மாங்கரை ஆலயத்தில் வைத்து Taize Prayer நடத்தப்படுவதாகவும், 08 ஆம் தேதி, களியல், ஆறுகாணி மற்றும் மஞ்சாலுமூடு ஆகிய மறைவட்டங்கள் இணைந்து மாறப்பாடி ஆலயத்தில் Taize Prayer நடத்தப்படுவதாகவும், 15 ஆம் தேதி, படந்தாலுமூடு மற்றும் நித்திரவிளை மறைவட்டங்கள் இணைந்து Taize Prayer நடத்தப்படுவதாகவும் முடிவு எடுக்கப்பட்டது.

மேலும் 22 ஆம் தேதி, காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இளையோர்களுக்கான ஒரு நாள் தியானம் சீனாய் தியான இல்லத்தில் வைத்து நடத்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. பின்னர் கூட்டமானது இறுதி செபத்துடன் இனிதே நிறைவுற்றது.

## "LUMA: Get Together to Glow"

பிப்ரவரி 15 ஆம் தேதி மாலை 2.30 மணிக்கு மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயத்தில் மஞ்சாலுமூடு மறைவட்ட இளைஞர் ஒருங்கிணைப்பு கூடுகை "LUMA: Get Together to Glow" நடைபெற்றது. இந்நிகழ்ச்சி மறைவட்டத்துக்கு உட்பட்ட அனைத்து இளைஞர்கள் மற்றும் 11, 12 ஆம் வகுப்பு மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

**சேனிகா**

**செயலர்**

### உலக நோயுற்றோர் தினம்

பிப்ரவரி 11 ஆம் தேதி உலக நோயுற்றோர் தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் போப் புனித இரண்டாம் ஜான் பால் அவர்களால் அனைத்து ஆலயங்களிலும் நிறுவப்பட்டது. தொடர்ந்து, நமது மறைமாவட்டத்தில், அனைத்து ஆலயங்களிலும் 2026 பிப்ரவரி 22 ஞாயிற்றுக்கிழமை, உலக நோயாளர்கள் தினம் கொண்டாடப்பட்டது.

### இறையியல் கல்லூரி மாணவர்களின் ஆராதனை

இறை அழைத்தல் உருவாகவும், திருச்சபை சமூக முன்னேற்றத்திற்காகவும், நமது மறைமாவட்டப் பேராலயம் ( கத்தீட்ரல் ) கட்டும் பணிக்காகவும் வேண்டி இறையியல் கல்லூரி மாணவர்கள் சார்பாக இயக்குநர் தந்தை ஷிஜோ அவர்களின் தலைமையில் பிப்ரவரி 08, படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் வைத்து ஒரு மணி நேர நற்கருணை ஆராதனை நடத்தப்பட்டது. இதில் 15 மாணவர்கள் பங்கேற்றனர்.

# இல்வாழ்வு இயக்கம்

## தக்கலை மறைமாவட்டம்



### திருவிவிலிய வினாடி வினாப் போட்டி

மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் சார்பாக பிப்ரவரி 22 ஆம் தேதி தாய்மார்களுக்கான திருவிவிலிய வினாடி வினாப் போட்டி (விவிலியம் திறந்து எழுதுதல்) அனைத்து மறைவட்ட ஆலயங்களிலும் நடைபெற்றது. சூசைபுரம் மறைவட்டத்தில் இருந்து சுமார் 36 தாய்மார்களும், படந்தாலுமூடு மறைவட்டத்திலிருந்து 30 தாய்மார்களும், தக்கலை பிலாங்காலை மறைவட்டத்திலிருந்து 33 தாய்மார்களும், ஆறுகாணி மறை வட்டத்திலிருந்து 20 தாய்மார்களும், களியல் மறைவட்டத்தில் இருந்து



37 தாய்மார்களும், நித்திரவிளை மறைவட்டத்தில் இருந்து 40 தாய்மார்களும், மஞ்சாலுமூடு மறைவட்டத்தில் இருந்து 50 தாய்மார்களும் சேர்ந்து மொத்தமாக 256 தாய்மார்கள் போட்டியில் பங்கேற்றனர். மேலும் இந்த திரு விவிலிய வினாடி வினா போட்டி தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்றும் திருவிவிலியத்தில் கொடுக்கப்பட்ட பகுதிகளை தங்களால் திரும்பத் திரும்ப வாசிக்க முடிந்ததால் மகிழ்ச்சி அளிப்பதாகவும் தேர்வு எழுதிய தாய்மார்கள் கூறினார்கள்.

*அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்*
*இயக்குநர்*




# வின்செண்ட்- தே-பவுல் சபை

## திட்ட தொகை வழங்கும் நிகழ்வு

புனித வின்செண்ட் தே பவுல் சபை சூசைபுரம் புனித சூசையப்பர் கிளைச்சபை சார்பாக இரண்டு பேருக்கு சுயத்தொழில் கடனுதவித் திட்டத்தின் மூலம் கடனுதவி பிப்ரவரி 08 ஆம் தேதி வழங்கப்பட்டது. ஒருவருக்கு 15,000 ரூபாயும், மற்றவருக்கு 20,000 ரூபாயும் வழங்கப்பட்டது. கடனுதவி வழங்குதல் கிளைச் சபையின் ஆன்மிக ஆலோசகர் பேரருட்தந்தை ஜோண்சிலால் அவர்கள் தலைமையில் நடந்தது. மத்தியப் பேரவையின் திட்ட அலுவலர் சகோ. எட்வின்சன் அவர்கள் முன்னிலை வகித்தார். கிளைச்சபை உறுப்பினர்கள் உடனிருக்க பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

## குமரி வின்செந்தியக் கூட்டமைப்பு வெள்ளி விழா நிறைவு

2025 ஜனவரி 26, மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் அழகிய மண்டபம் அன்னை ஆதா அரங்கில் குமரி வின்சந்திய கூட்டமைப்பின் வெள்ளி விழா கொண்டாட்டத்தை தொடங்கி வைத்தார். தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகளோடு ஓராண்டு செயல்திட்டமாக வெள்ளி விழா நிகழ்வுகள் நடைபெற்றது. அதன் நிறைவு விழா பிப்ரவரி 15, நட்டாலம் புனித



தேவசகாயம் திருத்தலத்தில் கோட்டாறு மறைமாவட்ட மேனாள் ஆயர் மேதகு பீட்டர் ரெமிஜியுஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருப்பலியோடு தொடங்கியது. தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருள்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம், திருத்தல அதிபர் அருள்முனைவர் பால் ரிச்சார்ட், கோட்டாறு மத்திய பேரவை ஆன்மீக ஆலோசகர் அருள்தந்தை

பென்சிகர் மற்றும் அருள் தந்தையர்கள் திருப்பலிக்கு முன்னிலை வகித்தனர். தொடர்ந்து நிறைவு பொதுக்கூட்டம் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சகோ. எட்வின்சன் தலைமையில் நடைபெற்றது. கூட்டமைப்பின் மேனாள் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சேவியர் ஜேம்ஸ் ராஜ் அறிமுக உரை நிகழ்த்தினார். மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வெள்ளிவிழா மலர் வெளியீட்டு செய்தி வழங்கினார். மேனாள் ஒருங்கிணைப்பாளர் சகோ P G வின்சென்ட் வெள்ளி விழா மலரை பெற்றுக் கொண்டார். செயலர் சகோ இன்கிள்பெட் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். தமிழக மண்டல திட்ட அலுவலர் சகோ. அலெக்சாண்டர், மண்டல மேனாள் ஒருங்கிணைப்பாளர் சகோ வெள்ளதுரை, கோட்டாறு மத்திய சபை தலைவர் சகோ. பிரிட்டோ ஆண்டனி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். குழித்துறை மத்திய சபை தலைவர் சகோ பால்ராஜ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மார்த்தாண்டம் மத்திய சபை தலைவர் சகோ யேசுராஜன் நன்றி கூறினார். இடை இடையே கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. முன்னாள் ஒருங்கிணைப்பாளர்களுக்கு நினைவு பரிசுகளும் மத்திய சபைகளுக்கு பாராட்டு பரிசுகளும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பண பரிசும் வழங்கப்பட்டது. நிறைவில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது.

***சகோ. D.Pஷாஜி,***
***தகவல் தொடர்பு அலுவலர்***

**தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வுப் பணிக்குழு**

கடந்த ஆறு ஆண்டுகளாக தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வுப் பணிக்குழு தலைவராக ஆயர் அவர்கள் தலைமை தாங்கினார். இந்த காலகட்டத்தில், நலவாழ்வுப் பணிக்குழுவின் பணி தக்கலை மறைமாவட்டத்தின் அனைத்து ஆலயங்களிலும் விரிவுபடுத்தப்பட்டது. அக்காலகட்டங்களில் மறைமாவட்ட செயலர்களாக பணியாற்றிய அருட்தந்தை தாமஸ் பூவத்தும்மூட்டில், அருட்தந்தை ஜிம்மி, அருட்தந்தை அஜின் சி. ஜோசப், பேரருட்தந்தை சுபின் புத்தன்புரைக்கல் மற்றும் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி அவர்களின் உறுதியான ஒத்துழைப்பு மற்றும் ஒற்றுமையும் இந்த பணியை பெரிதும் வலுப்படுத்தியுள்ளது, என தெரிவித்து ஆயர் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# உறவிய மலர்

## தவக்கால சிறப்பு நிகழ்வுகள்

1. உறவியம் வாயிலாக ஆலயத்தில் சிலுவைப் பாதை நடத்தி நேர்ச்சைக் கஞ்சி வழங்குதல்.

2. உறவியங்களில் வீடு வீடாக சிலுவைப் பாதை பவனி நடத்தி வீடுகளை மந்திரித்தல்.

3. உறவியம் வாயிலாக உதவிகள் செய்தல்.

4. சிலுவைப் பாதை செபம் வீடுகளில் நடத்தி ஆலயத்தில் வராதவர்களை ஆலயத்துக்கு அழைத்து வருதல்.

5. படுக்கை நோயாளிகளுக்கு நற்கருணை வழங்குதல்.

6. உறவியங்கள் சேர்ந்து வாகன வசதி ஏற்பாடு செய்து சீனாய் தியான இல்லத்தில் சென்று தியானத்தில் கலந்து கொண்டும் சிலுவைப் பாதை செபம் செய்தும் செபித்தல்.

7. ஒரு நாள் பாவ சங்கீர்த்தன ஆயத்தம் நடத்தி பாவசங்கீர்த்தனம் ஏற்பாடு செய்தல்.

### களியல் மறைவட்டம்

### புனித தோமையார் ஆலயம், மாறப்பாடி

தவக்கால சிறப்பு நிகழ்வாக நம் ஆண்டவரின் பாடுபட்ட திருசொரூபம், மரியாயின் சேனை வெள்ளி விழா நினைவாக வழங்கப்பட்டிருக்கும் மரியன்னையின் திருசொரூபம், மற்றும் பங்கின் பாதுகாவலர் புனித தோமையாரின் திருசொரூபம் எடுத்து வீடு மந்திரிப்புடன் எரிக்கோ திருப்பயணம் என்கிற பெயரில் சிலுவைப் பாதை நடைபெற்று வருகிறது. எரிகோ திருப்பயணத்தின் இறுதியில் ஒவ்வொரு உறவியங்களிலும் சிறப்பு நற்செய்தி பெருவிழா நடைபெறும். இதன் துவக்கமாக புனித சூசையப்பர் உறவியத்தில் வீடு வீடாக சென்று எரிகோதிருப்பயணம் பிப்ரவரி மாதம் 25 மற்றும் 26 தேதிகளில் நடைபெற்றது. மார்ச் 1 ஞாயிற்றுக்கிழமை உறவிய தியானமும் நடைபெற்றது. உறவிய இறை மக்கள் அனைவரும் வெளிமக்களும் இத்தியானத்தில் கலந்து கொண்டார்கள். பங்குத்தந்தை அருட்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்கள் தியானத்தை வழிநடத்தினார்.

## சூசைபுரம் மறைவட்டம்

## பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயம்



ஞாயிற்றுக்கிழமை ஒவ்வொரு உறவியத்திலும் சிலுவை பாதை நடத்தப்பட்டது. கல்லறை தோட்டத்தில் உறவிய அடிப்படையில் மெழுகு திரி ஏற்றி சிறப்பு ஜெபம் நடத்தப்பட்டது. பிப்ரவரி 11, நோயாளிகள் தினத்தை முன்னிட்டு அனைத்து உறவியங்களிலும் உள்ள நோயாளிகளுக்கு திருப்பலி மற்றும் தைலம் பூசி ஜெபித்தார்.

## மாங்கரை புனித வியாகப்பர் ஆலயம்

சனி, ஞாயிறு இரண்டு நாட்கள் உறவியங்களில் சிலுவை பாதை 16 இல்லங்களில் சென்று நடத்தப்பட்டு இறுதியில் அனைவருக்கும் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. நோயாளிகள் தினத்தை முன்னிட்டு அனைத்து உறவியங்களிலும் உள்ள நோயாளிகளுக்கு திருப்பலி மற்றும் தைலம் பூசுதல் நடைபெற்றது.

## பாத்திமா மாதா ஆலயம் பாத்திமாபுரம்

15 ஆம் தேதி காலை 9:45 மணிக்கு திருப்பலி முடிந்தவுடன் இரண்டு உறவியங்கள் சேர்ந்து ஆண்டு விழா நடத்தப்பட்டது. அதில் தலைவராக மாங்கரை புனித வியாகப்பர் ஆலய பங்குத்தந்தை டோஜி அவர்கள் தலைமையில் குத்துவிளக்கேற்றி ஆரம்பிக்கப்பட்டது. பங்குத்தந்தை லிஜோ அவர்களும் அருள் சகோதரிகளும் கலந்து கொண்டனர். உறவிய உறுப்பினர்களின் கலை நிகழ்ச்சிகள் மிக சிறப்பான முறையில் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

**அருட்தந்தை மிஜோ செபாஸ்டின்**
**இயக்குனர்**

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## மூத்த உறுப்பினர்களுக்கான இலவச சுற்றுலா

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் (KKSSS) சார்பில் 07-02-2026 அன்று மாலைக்கோடு, மஞ்சாலுமூடு, முக்கூட்டுக்கல், பென்கிரி மற்றும் முழுகோடு பகுதிகளில் செயல்படும் சுயஉதவி குழுக்களின் (SHG) மூத்த உறுப்பினர்கள் இலவச சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த சுற்றுலாவில் மொத்தம் 52 SHG பெண்கள் கலந்து கொண்டு உற்சாகமாக பயணத்தை அனுபவித்தனர். பெண்களின் மனநலன் மேம்பாடு, சமூக ஒற்றுமை வளர்ச்சி மற்றும் ஓய்வு



நேரத்தை பயனுள்ளதாக பயன்படுத்துவது என்பதே இந்த பயணத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. காலை ஜெபத்துடன் தொடங்கியது. இந்த சுற்றுலா SHG பெண்களுக்கிடையே நட்பு, ஒற்றுமை மற்றும் உற்சாகத்தை அதிகரிக்க உதவியது. தினசரி வாழ்க்கையின் அழுத்தத்திலிருந்து விடுபட்டு மனநிறைவை பெற்றதாக பெண்கள் தெரிவித்தனர். இதுபோன்ற மேலும் பல நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் எனவும் மூத்த உறுப்பினர்களுக்கான இலவச சுற்றுலாவுக்கு பெண்கள் KKSSS நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்தனர்.

## மலைக்கோடு ஸ்கூட்டி பயிற்சி துவக்க விழா

பிப்ரவரி 13, KKSSS சார்பில் மலைக்கோட்டில் ஒரு மாத ஸ்கூட்டி பயிற்சி தொடங்கப்பட்டது. பெண்கள் மற்றும் இளம் பெண்களின் தன்னம்பிக்கை, சுயநிறைவு வளர்ச்சிக்காக இந்த பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. மொத்தம் 24 மாணவிகள் சேர்ந்து பயிற்சி பெறுகின்றனர். தொடக்க நிகழ்ச்சி ஜெபத்துடன்

ஆரம்பமானது. தலைவர் உரையை இயக்குனர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி வழங்கி, பெண்கள் திறன் வளர்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். வாழ்த்து செய்தியை மாலைக்கோடு திருச்சிலுவை ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை ராபின்ஸ் குழிகோடில் வழங்கினார்.

பயிற்சி விதிமுறைகளை பயிற்சியாளர் திருமதி சுஜிதா விவரித்தார். இந்த நிகழ்ச்சியை அனிமேட்டர் திருமதி செல்வி சிறப்பாக ஒருங்கிணைத்தார். இந்த பயிற்சி ஒரு மாதம் நடைபெறும்.

## ஆரி வேலைப்பயிற்சி நிறைவு விழா

பெண்களின் திறன் மேம்பாடு மற்றும் சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் KKSSS சார்பில் ஒரு மாத கால ஆரி பயிற்சி நடைபெற்றது. இதன் நிறைவு விழா பிப்ரவரி 26 முழுகோட்டில் நடைபெற்றது. மொத்தம் 21 மாணவிகள் உற்சாகத்துடன் பயிற்சியை முடித்தனர். நிறைவு விழா இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. தலைமை உரையை இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி வழங்கி, தொழில்துறை பயிற்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, பெண்கள் தங்களது திறமைகளை வருமானம் ஈட்டும் முயற்சிகளாக மாற்ற வேண்டும் என ஊக்கமளித்தார்.

ஆரி வேலை ஆசிரியர் செல்வி ரஸ்மிதா தமது கற்பித்தல் அனுபவத்தை பகிர்ந்து மகிழ்ச்சி தெரிவித்தார். இரண்டு மாணவிகள் தங்களது பயிற்சி அனுபவத்தை பகிர்ந்து நன்றியை தெரிவித்தனர். பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்கள்



வழங்கப்பட்டன. இடையிடையே கலை நிகழ்சிகள் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை களப்பணியாளர் திருமதி அனிதா மேரி சிறப்பாக ஒருங்கிணைத்தார்.

## சிறப்பு விருந்தினர் வருகை

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்துக்கு பிரான்ஸ் நாட்டை சார்ந்த தொண்டு நிறுவனமான L'Euvre d'Orient அமைப்பின் செயலாளர் திரு. டொமினிக் மற்றும்

அவரது மனைவி திருமதி இஸபெல்லா வருகை தந்தனர். இவர்களுடன் தக்கலை மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களும் கலந்து கொண்டார்.

இயக்குநர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி விருந்தினர்களை பூ கொத்து கொடுத்து அன்புடன் வரவேற்றார். நிதி ஒருங்கிணைப்பாளர் சகோதரி ஆஷா, KKSSS செயல்பாடுகள் மற்றும் பல்வேறு சமூக மேம்பாட்டு திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார். விருந்தினர்கள் பணியாளர்கள் சந்தித்து, சேவை முயற்சிகளை பாராட்டினர். குறிப்பாக KKSSS பேக்கரி பிரிவை பார்வையிட்டு மகிழ்ச்சி தெரிவித்தனர். இந்த வருகை உறவுகளை வலுப்படுத்தும் முக்கியமான தருணமாக அமைந்தது.

## தையல் பயிற்சி துவக்க விழா

KKSSS சார்பில் பிப்ரவரி 07 மாறப்பாடியில் மூன்று மாத கால தையல் பயிற்சி தொடங்கப்பட்டது. 16 பெண்கள் கலந்து கொண்டனர். இயக்குநர் அருட்தந்தை அவர்கள் தலைமை தாங்கி பெண்களின் சுயதொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மாறப்பாடி, புனித தோமையார் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை மிஜோ அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். ஆசிரியர் திருமதி பிரேமா பயிற்சி திட்டத்தை விளக்கினார். அனிமேட்டர் திருமதி ராஜம் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

பிப்ரவரி 11, பத்துகாணியில் மூன்று மாத கால தையல் பயிற்சி தொடங்கப்பட்டது. 24 பெண்கள் கலந்து கொண்டனர். இயக்குநர் அருட்தந்தை அவர்கள் தலைமை தாங்கி பெண்களின் பொருளாதார சுயநிறைவை வலியுறுத்தினார். ஆசிரியர் திருமதி புஷ்பலதா பயிற்சி திட்டத்தை விளக்கினார். அனிமேட்டர் திருமதி ரீனா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

*செயலர்*

*அருட்தந்தை மகேஷ்,*

## வரவிருக்கும் நிகழ்வுகள்

மார்ச் 09,10,11 - மறைவட்ட அருட்தந்தையர்கள் கூடுகை

மார்ச் 30 – இளம் குருமடத்தில் இளம் குருத்துவப் பட்டங்கள்

மார்ச் 31 - திருத்தொண்டர் பட்டம், மஞ்சாலுமூடு

# நலவாழ்வுப் பணிக்குழு

## உலக புற்றுநோய் தின விழா விழிப்புணர்வு பேரணி




2026 பிப்ரவரி 04, தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு மற்றும் புனித ஜோசப் உயர் நிலைப்பள்ளி பிலாங்காலை இணைந்து புனித ஜோசப் உயர் நிலைப்பள்ளி வளாகத்தில் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி தொடங்கியது. நல வாழ்வு பணிக்குழு இயக்குநர் அருட்பணி மகேஷ் ஆண்டனி மற்றும் பள்ளியின் துணை முதல்வர் திரு சாந்த சீலன் இணைந்து பேரணிக்கான கொடியை ஏற்றி வைத்து பேரணியைத் தொடங்கி வைத்தனர். அதன் பின்னர் மாணவர்கள் விழிப்புணர்வு பலகைகள் ஏந்தி முழக்கங்கள் எழுப்பியபடி பள்ளி வளாகத்திலிருந்து அழகியமண்டபம் வரை பேரணியாகச் சென்று மீண்டும் பள்ளிக்கு திரும்பினர்.

பேரணிக்குப் பிறகு புற்றுநோயை எதிர்த்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. இதில் மாணவர்கள் புற்றுநோயைத் தடுப்போம் என்ற உறுதிமொழியுடன் கையெழுத்திட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் மொத்தம் 200 மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்டு சமூகத்தில் புற்றுநோய் விழிப்புணர்வை பரப்பும் முக்கிய செய்தியை எடுத்துரைத்தனர்.

*செயலர்*

*அருட்தந்தை மகேஷ்,*

# மறைமாவட்டச் செய்திகள்

## கயத்தாரில் விரிவாக்கப்பட்ட மறைத்தொண்டுதள சந்திப்பு

2026 பிப்ரவரி 02 கயத்தாறில் உள்ள FCC கான்வென்ட்டில் விரிவாக்கப்பட்ட மறைத்தொண்டுதள சந்திப்பு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் தொடங்கியது. அதைத் தொடர்ந்து பதினொரு உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. செயலர் அருட்தந்தை தாமஸ் ஜெபனேஷ் முந்தைய அறிக்கையை சமர்ப்பித்தார். அருட்சகோதரி வினீதா FCC அனைவரையும் வரவேற்றார். கயத்தார் திருதொண்டுதளத்தில், KKSSS ஆதரவுடன் கிராம குழந்தைகளுக்காக ஒரு புதிய 'கல்வி-பராமரிப்பு' திட்டம் தொடங்கப்பட்டது. திருநெல்வேலி மறைதொண்டுதளத்தில் புதிய ஆலய கட்டுமான நிதி திரட்டுதல் குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. வீட்டில் தயாரிக்கும் ஊறுகாய்களை விற்பனை செய்வது போன்ற சமூக முயற்சிகள் மூலம், நிதி திரட்டுவதாகவும் கூறப்பட்டது. கம்பம் மற்றும் தேனி மறைத்தொண்டுதள பழங்குடியின சமூகங்களுக்கு அவர்களின் தொண்டுகளை சுட்டிக் காட்டி, காஞ்சிரப்பள்ளி மறைமாவட்டத்துடன் இணைந்து ஆதரவற்றோர் இல்லம் நிறுவுவதற்கான கூட்டு 'கனவு திட்டத்தை' கூடுகையில் முன்மொழிந்தனர். விருதுநகர் மறைதொண்டுதளத்தில், மறைமாவட்ட இளைஞர்கள் தலைமையில் மூத்த மாணவர்களுக்கான வெற்றிகரமான தொழில் வழிகாட்டல் திட்டம் மற்றும் சொந்தமாக இல்லம் இல்லாத திருத்தொண்டுத் தளங்களில் செல்ல திரு இருதய அருட்சகோதரிகள் மூலம் 'மொபைல் கான்வென்ட்' திட்ட அறிவிப்பும் நடந்தது.

## அருட்தந்தையர்களுக்கு சூழலுக்கேற்ற உருவாக்கத் திட்டம்

2026 பிப்ரவரி 10 மற்றும் 11 ஆம் தேதிகளில் சங்கமத்தில் அருட்தந்தையர் பேரவையின் கூடுகை காலை 10.00 மணிக்கு ஆயர் அவர்கள் தலைமையில் தொடங்கியது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியின் கருத்தாளரான சங்கனாச்சேரி மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை மாணி புதியிடம் அவர்களை ஆயர் அவர்கள் அறிமுகம் செய்தார். அவர் உருவாக்கத் திட்டத்தை, காலையில் இரண்டு அமர்வுகளாகவும், மதியம் ஒரு அமர்வாகவும், தனது மேய்ப்புப்பணி அனுபவத்தின் அடிப்படையில், வழி நடத்தினார். அருட்தந்தை றோபின்ஸ் குழிக்கோடில் அவர்களால் அருட்தந்தையர் பேரவையின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் தலைமையில் ஒரு மணி நேரம் ஆராதனை நடைபெற்றது.

பிப்ரவரி 11, மறைமாவட்டத்தின் ஒவ்வொரு இயக்கங்களின் செயல்பாடுகளின்

மதிப்பீடு அறிக்கைகளாக வழங்கப்பட்டது. துறைகளின் இயக்குநர்கள் காணொலி காட்சி மூலம் விளக்கக்காட்சிகளுடன் நன்கு தயாரிக்கப்பட்டு, ஓராண்டு செயல்பாடுகளை சமர்ப்பித்தார்கள். அருட்தந்தையர் பேரவையினர் விவாதங்களில் ஈடுபட்டு மதிப்புமிக்க ஆலோசனைகளை வழங்கினர்.

## மறைமாவட்டப் பேராலயம் ஆயத்த கட்டம்

*2026* பிப்ரவரி *01*, அனைத்து ஆலயங்களிலும் வாசிக்கப்பட்ட ஆயர் அவர்கள் சுற்றறிக்கை கடிதத்தின் மூலம் பேராலயம் கட்டுவதற்கான ஜெபம் செய்தல், பேராலயத்தின் படத்துடன் கூடிய சுவரொட்டியின் முக்கிய காட்சி மற்றும் அறிவிப்பு வழங்கப்பட்டது. இந்த கட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் பிப்ரவரி 15 அன்று சேகரிக்கப்பட்ட 'ஒரு நாள் ஊதியம்' ஆகும். இந்த முயற்சி வெறும் நிதி திரட்டும் முயற்சியாக இல்லாமல் ஒரு ஆன்மீக பயிற்சியாக இருந்தது விசுவாசிகளின் ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் உழைப்பில் ஒரு பகுதியை நமது மறைமாவட்டத்தின் 'போரலயத்திற்கு' பங்களிக்க அழைக்கப்பட்டனர்.

## ஆராதனை மற்றும் அடிக்கல் நாட்டுதல்

*2026* பிப்ரவரி *17*, சரியாக *4.00* மணிக்கு தக்கலை மறைமாவட்டத்திற்கான வரலாற்று சிறப்புமிக்க சூசையப்பர் பேராலயத்தின் அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தந்த மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களுக்கும் பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகை தந்த சிறப்பு விருந்தினர்கள் திரு.டொமினிக் பிளேட்ரி மற்றும் திருமதி. இஸபெல்லா அவர்களுக்கும் மற்றும் அனைத்து விருந்தினர்களுக்கும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து ஒரு மணி நேர ஆராதனையை அருட்தந்தை வினு டி. ஜோசப் அவர்கள் வழிநடத்தினார். தொடர்ந்து, மறைமாவட்டத்தின் எல்லா பங்குகளிலிருந்தும் மக்கள் கொடுத்த ஒரு நாள் ஊதிய காணிக்கை அந்தந்த பங்குதந்தை மற்றும் கைக்காரர்கள் கொண்டு வந்து ஆயர் கையில் ஒப்படைத்தனர். பங்கு தந்தையர்கள் அடிக்கல் நாட்டப்படும் கல்லின் மீது சிலுவை அடையாளம் வரைந்து ஜெபித்தனர். பின்னர் வருகை தந்திருந்த இறைமக்கள், அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் அனைவரும் இரண்டு வரிசைகளில் ஜெபித்துக்கொண்டு முன்னே செல்ல அடிக்கலானது ஒவ்வொரு மறைவட்ட அருட்தந்தையர்களாலும் மாறி மாறி ஏந்தி வரப்பட்டு ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டது. பேராலய வளாகத்தில் நடைபெற்ற சிறிய ஜெப வழிபாட்டிற்கு பின்னர் ஆயர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இறுதியாக அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. கலந்துகொண்ட மக்கள் அனைவரும் புது உற்சாகத்தோடு கலைந்து சென்றனர்.

## FEASTDAYS OF REV. FATHERS - MARCH 2025

| | |
|---|---|
| FR. JOSE MUTTATHUPADOM | 19 |
| FR. AJIN JOSE | 19 |
| FR. AJIN C JOSEPH | 19 |
| FR. DENCY MUNDUNADACKAL | 19 |
| FR. GINOY THOTTIYIL | 19 |
| FR. JIMMY THEKKEKADUMATHIL | 19 |
| FR. JINU THEKKETHALACKAL | 19 |
| FR. JITHIN VETTITHURUTHEL MCBS | 19 |
| FR. JOBIN VETTUKALLEL | 19 |
| FR. JOMON MANGALAMADOM | 19 |
| FR. JOSE KANACHIKUZHIYIL | 19 |
| FR. JOSE KOOLIPURACKAL CMI | 19 |
| FR. JOSE VAYALIL | 19 |
| FR. JOSEMON PAUL PURAYIDATHIKUNNEL | 19 |
| FR. JOSEPH ANITHOTTAM CMI | 19 |
| FR. JOSEPH (BIBIN) KOCHEETHARA | 19 |
| FR. JOSEPH SANTHOSH | 19 |
| FR. JOSY PUTHENPURACKAL | 19 |
| FR. LIJU MARATTUKALAM | 19 |
| FR. PRINCE CHERIPPANATTU | 19 |
| FR. PRINCE MALIYIL | 19 |
| FR. PRINTO KURIAS | 19 |
| FR. ROBINS KUNNUMMALIL CMI | 19 |
| FR. SAJAN NETTAPONGHU | 19 |
| FR. SOORAJ KADAVIL MCBS | 19 |
| FR. TOJI KOZHUVAKANDATHIL | 19 |
| FR. VINU D JOSEPH | 19 |

# மறைவட்டச் செய்திகள்

## மஞ்சாலுமூடு

- **புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – மஞ்சாலுமூடு**

பேரருட்தந்தை பிலிப் கொடியந்தற அடிகளாரின் 13 ஆவது நினைவு திருப்பலி காயல்ப்புறம் புனித சூசையப்பர் ஆலயத்தில் பிப்ரவரி 9 ஆம் தேதி பங்கு தந்தையின் தலைமையில் ஆலய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 2023 ல்



முதப்பன்கோட்டில் தொடங்கப்பட்ட வனமாதா குருசடியின் முதல் ஆண்டு விழா 11 ஆம் தேதி நடைபெற்றது. 12 ஆம் தேதி பேரருட்தந்தை பிலிப் கொடியந்தற அடிகளாரின் நினைவு திருப்பலியும் ஒப்பீசும் நடைபெற்றது. குழந்தை ஈசோ இயக்கத்தின் மறைவட்ட கலைப் போட்டி 14 ஆம் தேதி காட்டாத்துறையில் நடைபெற்றது. அதில் எல்லா போட்டிகளிலும் முதல் பரிசு பெற்று 60 புள்ளிகளுடன் மறைவட்டத்தில் முதலிடம் பெற்றனர். மறைமாவட்ட முதன்மை பேராலயம் அடிக்கல் நாட்டு விழா 17 ஆம் தேதி நடைபெற்றது. அதில் நமது பங்கு மக்களின் பங்களிப்பு தொகை ஆயரிடம் கொடுக்கப்பட்டது. தவக்காலத்தில் எல்லா வெள்ளிக் கிழமைகளிலும் மாலை திருப்பலிக்கு பின் சிலுவைப் பாதையை இரண்டு உறவியங்கள் சேர்ந்து வழிநடத்துவார்கள் இறுதியில் அந்த உறவியங்கள் சார்பாக கஞ்சி அனைவருக்கும் வழங்கப்பட்டது. 22 ஆம் தேதி நோயாளிகள் தினத்தை முன்னிட்டு காலை திருப்பலிக்கு பின் வின்செந்திய உறுப்பினர்களுடன் சேர்ந்து பங்குத் தந்தை 31 நோயாளர்களை அவர்களின் வீடுகளில் சந்தித்து ஜெபித்தார். 10 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கும் பிள்ளைகளுக்காக 28 ஆம் தேதி மாலையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. முடிவில் சிறப்பு ஜெபமும் பங்கு தந்தை பிள்ளைகளின் தலையில் கை வைத்து ஜெபித்து, மந்திரித்து காசு ரூபம் வழங்கினார்.

## புனித குரியாகோஸ் எலியாஸ் சாவற அடிகளார் ஆலயம் குட்டைகோடு



பிப்ரவரி 01, ஆலயத்தில் புதிதாக தோண்டப்பட்ட கிணறு அர்ச்சிப்பு விழா பங்குத்தந்தை அருட்தந்தை ஜோகேஷ் தலைமையில் நடைபெற்றது.

**திருச்சிலுவை தேவாலயம் மாலைக்கோடு**

சீரோ மலபார் சபையின் பொது நிலையினர் 9 பேர் 4 குழுக்களாக மாலைக்கோடு திருச்சிலுவை ஆலய மக்களின் வீடுகளை பிப்ரவரி 4, 5, 6 (புதன், வியாழன், வெள்ளி) தேதிகளில் சந்தித்து அவர்களுடன் உரையாடி ஜெபம் செய்து அனுபவத்தை பெற்றுக் கொண்டார்கள். தந்தையர் நல்வாழ்வு இயக்கத்தின் சார்பில் பிப்ரவரி 8-ஆம் தேதி வீடுகளில் தேங்கியுள்ள பழைய பொருட்களை வீடுதோறும் சென்று சேகரித்து ஏலம் நடத்தி ரூபாய் 30,000 சேகரித்தார்கள். சாம்பல் திங்கள் திருச்சடங்கு மாலை 6:00 மணிக்கு நடைபெற்றது. தவக்கால நோன்பின் பகுதியாக அனைத்து வியாழக்கிழமைகளில் மாலை 6:00 மணிக்கு திருப்பலி, அதைத் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்று வருகிறது. அனைத்து வெள்ளிக்கிழமைகளில் மாலை 6:00 மணிக்கு திருப்பலி, சிலுவைப்பாதை அதைத்தொடர்ந்து நேர்ச்சை கஞ்சி வழங்குதல் ஆகியவை உறவியம் சார்பில் நடத்தப்படுகிறது. அனைத்து சனி, ஞாயிறு மற்றும் திங்கள் கிழமைகளில் அனைத்து உறவியங்கள் சார்பில் சிலுவைப்பாதை, வீடு மந்திரித்தல் மற்றும்



உறவிய தியானம் போன்றவை நடைபெற்று வருகிறது. மஞ்சாலுமூடு மறைவட்ட இளைஞர் இயக்கத்தின் சார்பில் பிப்ரவரி 15 ஞாயிற்றுக்கிழமை லூமா (LUMA) என்ற தலைப்பில் தவக்கால தியானம் மற்றும் பாவ சங்கீர்த்தனம் போன்றவை மாலைக்கோடு திருச்சிலுவை தேவாலயத்தில் வைத்து நடைபெற்றது. அனைத்து மறைவட்ட அருட்தந்தையர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். ஆலய கல்லறைத் தோட்டத்தில் குடும்ப கல்லறைக்கான வேலைகள் நடைபெற்று வருகிறது.

## தக்கலை – பிலாங்காலை

### புனித சூசையப்பர் ஆலயம் தடிக்காரன்கோணம்

பிப்ரவரி 16 இல் சாம்பல் திங்கள் திருப்பலி மற்றும் சாம்பல் பூசுதல் திருச்சடங்கு நடைபெற்றது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை திருப்பலி தொடர்ந்து சிலுவைப்பாதை நடைபெறும். மறைக்கல்வி ஊக்குவிப்பாளர் மறைக்கல்வி நிலையத்தை பார்வையிட்டார். நோயாளிகள் தினத்தை முன்னிட்டு ஆராதனை நடைபெற்றது.

### அன்னை தெரசா ஆலயம், கல்லுவிளை

பிப்ரவரி 17 ஆம் தேதி, பிரான்ஸ் நாட்டை சார்ந்த தொண்டு நிறுவனமான L'Eu-vre d'Orient அமைப்பின் செயலர் திரு டோமினிக் மற்றும் அவரது மனைவி திருமதி. இசபெல்லா ஆகியோர், ஆலயத்திற்கு வருகை புரிந்தார்கள். மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்தின் அவர்களும் உடன் வருகை தந்து சிறப்பித்தார்கள். விருந்தினர்களை பங்குத்தந்தை அருட்பணி மகேஷ் ஆண்டனி மற்றும் பங்குமக்கள் இணைந்து வரவேற்றனர். பங்குத்தந்தை ஆலயத்தின் செயல்பாடுகள் மற்றும் பணிகள் குறித்தும் ஆலய கட்டுமானத்தின் போது பொருளாதார உதவி வழங்கியதற்கு பங்கு மக்கள் சார்பில் நன்றியையும் தெரிவித்தார். ஆயர் அவர்கள் விருந்தினர்களை பாராட்டி வாழ்த்துரை வழங்கினார். இறுதியாக விருந்தினர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கி நன்றி தெரிவித்தனர்.



## ▶ புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் வெள்ளாம்பி

பிப்ரவரி 16 இல் சாம்பல் திங்கள் திருப்பலி சாம்பல் பூசுதல் திருச்சடங்கு நடைபெற்றது. நோயாளிகள் தினத்தை முன்னிட்டு ஒரு மணிநேர ஆராதனை நடைபெற்றது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் திருப்பலிக்கு பிறகு சிலுவைப்பாதை நடைபெற்று வருகிறது.

## ▶ புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை

பிப்ரவரி 16 இல் சாம்பல் திங்கள் திருப்பலி தொடர்ந்து சாம்பல் பூசுதல் திருச்சடங்கும் மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது. எல்லா புதன்கிழமைகளிலும் மாலையில் 6.30 மணிக்கு திருப்பலி தொடர்ந்து ஆராதனையும் நடைபெற்று வருகிறது. வெள்ளிக்கிழமை திருப்பலியும் சிலுவைப்பாதையும் நடைபெற்று வருகிறது.

## ▶ புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

பிப்ரவரி 02 ம் தேதி பங்குதந்தை பேரருட்தந்தை ஜோஷி தேவலக்கரா CMI அவர்களின் தாயார் மரணமடைந்தார். நல்லடக்க திருச்சடங்கில் பங்குமக்கள் 20 பேர் கலந்து ஒப்பீஸ் பாடி நல்லடக்க திருச்சடங்கில் கலந்து கொண்டனர். இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி நடைபெற்றது. ஒவ்வொரு வாரம் பிறந்தநாள் திருமணநாள் கொண்டாடுபவர்களுக்காக ஆலயத்தில் ஜெபித்து பரிசுகள் வழங்கப்படுகிறது. வியாழக்கிழமை மாலையில் திருப்பலி மற்றும் ஆராதனையும் வெள்ளிக்கிழமை திருப்பலி மற்றும் சிலுவைப்பாதையும், ஒவ்வொரு நாளும் திருப்பலி முடிந்த உடன் சிலுவைப்பாதையும் நடைபெறுகிறது.



சாம்பல் திங்கள் திருப்பலி மற்றும் சாம்பல் பூசுதல் நிகழ்வு நடைபெற்றது. 17 ம் தேதி நடைபெற்ற மறைமாவட்ட பேராலயம் கட்டுவதற்கான கல் போடுதல் நிகழ்வில் பங்குதந்தை மற்றும் கைக்காரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மறைக்கல்வி ஊக்குவிப்பாளர் மறைக்கல்வி நிலையத்தை பார்வையிட்டார். 28ம் தேதி பங்குதந்தை தலைமையில் திருப்பணியாளர்களுக்கான திருப்பயணம் நடைபெற்றது.

## சூசைபுரம்

### ▶ கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

உலக நோயாளர் தினம் மற்றும் புனித லூர்து அன்னை திருநாள் 11 ஆம் தேதி பங்கில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பங்கில் உள்ள அனைத்து நோயுற்றோர் மற்றும் முதியோர்கள் பங்கு நலவாழ்வு பணிக்குழுவினரால் வாகனங்களில் அழைத்து வரப்பட்டு அவர்களுக்காக சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து முதியோர், நோயுற்றோர் ஆகியோருக்காக தைலம் பூசி ஜெபிக்கப்பட்டு அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. 15 ஆம் தேதி மாலை 4 மணிக்கு உயிர் நீத்தோருக்காக சிறப்பு திருப்பலி, ஆலயத்திலிருந்து கல்லறை தோட்டம் நோக்கி பவனியும் கல்லறைத் தோட்டத்தில் உயிர் நீத்தோரை நினைத்து மெழுகுவர்த்தி ஏந்தி ஒப்பீஸ் ஜெபமும் சொல்லப்பட்டது. நிறைவில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளை பங்குத்தந்தை அஜின் ஜோஸ் முன்னின்று நிறைவேற்றினார். 16 ஆம் நாள் விபூதி திங்கள் காலை 6:15 மணிக்கு நடைபெற்ற திருப்பலியோடு தொடங்கியது. பங்கில் தொடர்ந்து விவிலிய வாசிப்பும் வினாடி வினாப் போட்டியும் நடைபெறுகிறது. உறவியங்கள் சார்பில் வீடுகள் தோறும் சிலுவைப் பாதை நடைபெற்று வருகிறது.

### ▶ புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

பிப்ரவரி 1 ஆம் தேதி, பிற்பகல் 2 மணிக்கு பங்குத்தந்தை தலைமையில் பங்குப் பேரவை நடைபெற்றன. 13 ஆம் தேதி இறந்தவர்களின் நினைவு நாள் கொண்டாடப்பட்டது. ஆலய மோண்டளத்தில் இறந்தவர்களின் புகைப்படம் வைத்து திருப்பலி முடிந்தவுடன் மோண்டளத்தில் ஒப்பீஸ் சொல்லப்பட்டு புகைப்படம் அருள்தந்தையால் மந்திரிக்கப்பட்டன. 18 ஆம் தேதி, இரண்டு பேருக்கு அருட்தந்தை டோஜி அவர்கள் தலைமையில் திருமுழுக்கு வழங்கப்பட்டன. 19,26 ஆகிய தேதிகளில் இளையோர்கள் சார்பாக ஆலயத்தில் சிலுவைப் பாதை நடத்தப்பட்டன. 23 ஆம் தேதி, நோயாளிகள் தினம் கொண்டாடப்பட்டது. பின் அனைவருக்கும்



ஜெபமாலை பங்கு தந்தையால் வழங்கப்பட்டது. தொடர்ந்து அருள்தந்தை தலைமையில் திருமுழுக்கு மற்றும் உறுதி பூசுதல் ஆகியவை நடைபெற்றன.

**தூய தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்**

பிப்ரவரி 4, 11 மற்றும் 18 ஆகிய தேதிகளில் திருப்பலி அதைத் தொடர்ந்து ஜெபமாலைப் பவனியும் நடைபெற்றன. 6 மற்றும் 13 ஆகிய நாட்களில் திருப்பலியும் அதை தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றன.

**புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்**

பிப்ரவரி 20 மற்றும் 27 ஆகிய நாட்களில் திருப்பலி அதை தொடர்ந்து சிலுவை பாதை நடைபெற்றது. 26 ஆம் தேதி பங்கு மக்களுக்கு அருள் சகோதரி லின்ஸ் அவர்கள் விவிலிய வகுப்பு நடத்தினார்கள்.

**பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்**



பிப்ரவரி 13 ஆம் தேதி திருப்பலியை தொடர்ந்து தியானம் ஆராதனை மற்றும் ஒப்புரவு அருட்சாதனம் நடைபெற்றது. 15 ஆம் தேதி திருப்பலியை தொடர்ந்து உறவியங்களின் ஆண்டு விழா நடைபெற்றது. 16 ஆம் தேதி சாம்பல் மந்திரித்து நெற்றியில் சாம்பல் பூசப்பட்டது.

**புனித சூசையப்பர் மறைவட்ட தேவாலயம், சூசைபுரம்**

பிப்ரவரி 06 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை திருப்பலிக்கு பின்னர் விவிலிய வகுப்பு, சிறப்பு ஆராதனை நடைபெற்றது. பின்னர் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. 09 ஆம் தேதி திங்கள் கிழமை காலை திருப்பலி முன்னாள் பங்குத்தந்தை பேரருட்தந்தை பிலிப் கொடியந்தர அவர்களின் நினைவு திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலிக்கு பின்னர் ஒப்பீசு சொல்லி ஜெபிக்கப்பட்டது. 13 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.45 மணிக்கு அனைத்து ஆன்மாக்களுக்கு திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டு ஒப்பீசு சொல்லி ஜெபிக்கப்பட்டது. பேராலய அடிக்கல் நாட்டு விழாவினை முன்னிட்டு ஐந்து நாட்கள் திருப்பலிக்குப் பின்னர் புனித சூசையப்பர் நவநாள் சொல்லி ஜெபிக்கப்பட்டது. 15 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பேராலய வளாகம் பங்கு மக்களால் சுத்தம் செய்யப்பட்டது. 16 ஆம் தேதி சாம்பல் திங்கள் அன்று காலை 6.15

மணிக்கும் மாலை 6.00 மணிக்கும் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. 17 ஆம் தேதி மாலை 5.30 மணிக்கு மாவட்டத்திற்காக புனித சூசையப்பர் பேராலயத்தின் அடிக்கல் நாட்டு விழா சூசைபுரத்தில் வைத்து நடைபெற்றது. முன்னதாக நான்கு மணிக்கு இவ்விழாவிற்கு வருகை தந்த மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களுக்கும் பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகை தந்த சிறப்பு விருந்தினர்கள் திரு.டொமினிக் பிளேட்ரி மற்றும் திருமதி. இஸபெல்லா அவர்களுக்கும் மற்றும் அனைத்து விருந்தினர்களுக்கும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் நடைபெற்ற சிறப்பு ஆராதனையில் மறைமாவட்டத்தின் எல்லா பங்குகளிலிருந்தும் மக்கள் கொடுத்த ஒரு நாள் ஊதிய காணிக்கையினை அந்தந்த பங்குதந்தை மற்றும் கைக்காரர்கள் கொண்டு வந்து ஆயர் கையில் ஒப்படைத்தனர். பங்கு தந்தையர்கள் அடிக்கல் நாட்டப்படும் கல்லின் மீது சிலுவை அடையாளம் வரைந்து ஜெபித்தனர். பின்னர் வருகை தந்திருந்த மக்கள், குருக்கள் மற்றும் கன்னியர்கள் அனைவரும் இரண்டு வரிசைகளிலாக ஜெபித்துக்கொண்டு முன்னே செல்ல அடிக்கல் ஒவ்வொரு மறைவட்ட குருக்களாலும் மாறி மாறி ஏந்தி வரப்பட்டு ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டது. பேராலய வளாகத்தில் நடைபெற்ற சிறிய ஜெப வழிபாட்டிற்கு பின் ஆயர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இறுதியாக அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. கலந்துகொண்ட மக்கள் அனைவரும் புது உற்சாகத்தோடு கலைந்து சென்றனர். 22 ஆம் தேதி மறைக்கல்வி நிலையம் ஊக்குவிப்பாளர் திரு. விஜயராஜன் அவர்களால் பார்வையிடப்பட்டது. மாதர் ஜோதிஸ் இயக்கம் மறைமாவட்ட பொறுப்பாளரால் பார்வையிடப்பட்டது. மேலும் அன்று மாலை மாதர் ஜோதிஸ் இயக்கத்தினருக்கான வினாடி வினா போட்டி நடைபெற்றது. தவக்காலத்தின் வியாழக்கிழமைகளில் திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனையும் வெள்ளிக்கிழமைகளில் திருப்பலி மற்றும் சிலுவைப்பாதையும் நடைபெற்று வருகின்றது. முதல் மற்றும் மூன்றாம் வெள்ளிக்கிழமைகளில் நோயாளிகள் வீடுகளில் சென்று திவ்ய நற்கருணை வழங்கப்பட்டு வருகின்றது.

## களியல் மறைவட்டம்

- **புனித தோமையார் ஆலயம், மாறப்பாடி**

பிப்ரவரி 10 ஆம் தேதி சாம்பல் திங்கள் மாலை 6.00 மணிக்கு ஜெபமாலையும் அதனைத் தொடர்ந்து 6.30 மணிக்கு குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் ஆடம்பரத் திருப்பலியும் நடைபெற்றது. 17 ஆம் தேதி சூசைபுரத்தில் வைத்து நடைபெற்ற பேராலய

அடிக்கல் நாட்டு விழாவில் பங்குதந்தை, அருட்சகோதரிகள் மற்றும் கைக்காரர்கள் கலந்து கொண்டனர். 22 ஆம் தேதி களியல் மறைவட்ட ஆலயத்தில் நடைபெற்ற மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான வினாடி வினா போட்டியில் அதிகமான தாய்மார்கள் கலந்து கொண்டனர். 22 ஆம் தேதி திரு இருதய அருட்சகோதரிகளால் நடத்தப்பட்ட தாய்மார்களுக்கான கட்டுரை போட்டியிலும் மறைக்கல்வி மாணவர்களுக்கு ஆயர் மார் மாத்யூ காவுகாட் தந்தை அவர்களின் பொன்மொழிகள் எழுதும் போட்டியிலும் இளையோர்களுக்கு வினாடி வினா போட்டியிலும் அனைவரும் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றனர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் திருப்பலி மற்றும் திருச்சிலுவை பாதை உறவியங்கள் வாயிலாக நடத்தப்படுகிறது. இறுதியாக அனைவருக்கும் நேர்ச்சை கஞ்சியும் உறவியங்கள் சார்பாக வழங்கப்படுகிறது.

### ▶ திரு இருதய ஆலயம், பள்ளிக்கோணம்

பிப்ரவரி 22 ஆம் தேதி, விவிலிய வினாடி வினா போட்டியில் பள்ளிக்கோணம் தாய்மார்கள் கலந்து கொண்டனர். 22 ஆம் தேதி திருப்பலிக்குப் பின் மறைக்கல்வி பெற்றோர் ஆசிரியர்கள் கூட்டம் நடைபெற்றது. சனிக்கிழமை மாலை மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை வேளைகளில் மறைக்கல்வி பாடங்களை மாணவர்களை படிக்க வைக்க வேண்டும் என்றும், வருடத்தில் மூன்று முறை பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைபெறும் எனவும் தெருவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### ▶ காரோடு புனித சூசைப்பர் ஆலயம்

பிப்ரவரி 1 ஞாயிறன்று மறைக்கல்வி நிலையத்தை பார்வையிட ஊக்குவிப்பாளர் திரு. ஜாண் பிரைட் அவர்கள் வருகைத்தந்து அனைத்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பார்வையிட்டு தேவையான ஆலோசனை மற்றும் அறிவுரைகளை வழங்கினார். சாம்பல் திங்கள் நிகழ்வானது பிப்ரவரி மாதம் 16 ஆம் தேதி மாலை 5.30 மணியளவில் இரக்கத்தின் செபமாலையுடன் ஆரம்பமானது. தொடர்ந்து திருப்பலியும் சாம்பல் பூசுதல் நிகழ்வும் நடைப்பெற்றது.

## படந்தாலுமூடு

### ▶ புனித பவுல் ஆலயம், தெற்றியோடு

பிப்ரவரி 16 ஆம் தேதி, சாம்பல் திங்கள் திருச்சடங்குகள் மாலை 6 மணிக்கு நடைபெற்றது. முத்திப்பேறு பெற்ற ராணி மரியா அவர்களின் திருவிழாவை

முன்னிட்டு 17 முதல் 24 ஆம் தேதி, வரை மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து நவநாளும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

## திரு இருதய மறைவட்ட ஆலயம், படந்தாலுமூடு

பிப்ரவரி 4 முதல் 6 வரை மூன்று நாட்கள் வீடு சந்திப்பு நடைபெற்றது. 16 ஆம் தேதி, சாம்பல் திங்கள் திருச்சடங்குகள் மாலை 6 மணிக்கு ஆரம்பமானது.



14 ஆம் தேதி, காட்டாத்துறை ஆலயத்தில் வைத்து நடைபெற்ற குழந்தை ஈசோ இயக்கம் மாணவர்களுக்கான போட்டியில் குழந்தை ஈசோ இயக்க மாணவர்கள் பங்கேற்று முதலிடம் பெற்றனர். 22 ஆம் தேதி, முத்திப்பேறு பெற்ற ராணி மரியாவின் திருவிழா கொண்டாடப்பட்டது. தவக்காலத்தை முன்னிட்டு அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் காலை 6:00 மணிக்கு திருப்பலியும் அதனை தொடர்ந்து திருச்சிலுவை பாதையும் நடைபெற்று வருகிறது.

## மார்டின் டி போரஸ் ஆலயம் கழுவன்திட்டை

பிப்ரவரி 17 ஆம் தேதி, ஆலயம் கட்ட நிதி உதவி வழங்கிய பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த திரு டொமினிக் பிளேட்ரி மற்றும் திருமதி இஸபெல்லா ஆலயத்தை பார்வையிட்டனர். பங்கு மக்கள் அனைவரும் அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். 14 ஆம் தேதி, குழந்தை ஈசோ இயக்க மாணவர்கள் போட்டிகளில் பங்கேற்றனர். 15 ஆம் தேதி, புதிய உறவிய தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 16 ஆம் தேதி, மாலை 6 மணிக்கு சாம்பல் திங்கள் திருச்சடங்குகள் நடைபெற்றது. தவக்காலத்தை முன்னிட்டு அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் காலை 6 மணிக்கு திருப்பலியும் அதனை தொடர்ந்து திருச்சிலுவைப்பாதையும் நடைபெற்று வருகிறது.

**தகவல் சேகரிப்பு: திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி சுனிதா**

# தென்காசி மறைத்தள செய்திகள்

### *ஆண்டு விழா*

புனித ஜோசப் பள்ளிக்கூடம் ஆண்டு விழா பிப்ரவரி 13 ஆம் தேதி மாலை 5 மணி அளவில் ஆரம்பிக்கப்பட்டு குழந்தைகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக தென்காசி மாவட்ட துணை ஆட்சியர், எம்.சி.பி.எஸ் துறவற மகாணத்தலைவர் பேரருள்தந்தை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மற்றும் தனியார் பள்ளி கூடத்தின் டி.இ.ஒ அலுவலர் அவர்களும் விழாவில் பங்கெடுத்து வாழ்த்துக்கள் பரிமாறினர்கள்.

### *தூய சகாய அன்னை ஆலயம் சுந்தர பாண்டியபுரம்*

பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாதாந்திர தியானம் நடைபெற்றது. 50 க்கு மேற்பட்ட இறைமக்கள் கலந்து கொண்டு இறை ஆசிர் பெற்றுச்சென்றனர்.

### *அருட்தந்தையர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூடுகை*

பிப்ரவரி 28 ஆம் தேதி வாஞ்சி நகர் ஆலயத்தில்மாலை 5.30 மணி அளவில் ஆராதனையுன் கூடுகை ஆரம்பமானது. தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோசப் முட்டத்து பாடம் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார். பக்த இயக்கங்களின் செயல்பாடுகள் மற்றும் மறைத்தள பணிகளைப் பற்றி கலந்ததுரையாட்டப்பட்டன. ஒருங்கிணைப்பாளர் அருள்தந்தை சுமேஷ் அவர்கள் கூடுகையை பொறுப்பேற்று நடத்தினார்.இறுதிதியில் அருட்சகோதரி ஜென்னி தெரேஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றிகள் கூறினார். அன்பு விருந்துடன் கூடுகை நிறைவுற்றது.

### பிரான்ஸ் நாட்டுப் பிரதிநிதி வருகை

மறைமாவட்ட முதன்மை நிதி வழங்கும் நிறுவனங்களில் ஒன்றான பிரான்ஸ் நாட்டின் L'OEuvre d'Orient இன் பொதுச் செயலாளர் திரு. டொமினிக் மற்றும் அவரது மனைவி திருமதி இஸபெல்லா பிப்ரவரி 1-ம் தேதி மறைமாவட்டம் வருகை புரிந்தார். அருட்தந்தை ஜார்ஜ் கலங்கரா SDB, ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களுக்கும் விருந்தினர்களும் மறைமாவட்டப் பகுதிகளில் இரண்டு நாட்கள் பயணம் மேற்கொண்டனர். குறிப்பாக, தொண்டு நிறுவனம் வாயிலாக பலன் பெற்ற பகுதிகள் பார்வையிடப்பட்டது. விருந்தினர் இருவருக்கும் இப்பார்வை மிகுந்த மகிழ்வைத் தந்தது.

## MONTHLY AGENDA – MARCH 2026

| DATE | DAY | EVENTS |
|---|---|---|
| 1 | Sun | VC: Vocation Promotor Visit – Kaliyal Forane<br>CAT: BTCT<br>SMYM: Arukani Forane Unit Visit<br>STI: Class<br>SVP: CC Meeting |
| 2 | Mon | Forane Vicars Meeting |
| 4 | Wed | VC: Lenten Vocation Recollection for Aspirants (Diocesan Level) |
| 6 | Fri | FA: Marriage Preparation course |
| 7 | Sat | VC: Lenten Vocation Recollection for Aspirants (Diocesan Level)<br>FA: Marriage Preparation course |
| 8 | Sun | KKSSS: Women's Day Celebration<br>URM: Thuckalay-Pilankalai Forane Animators & Organizers Meeting<br>CAT: BTCT<br>SMYM: Arukani Forane Unit Visit & Frane Gathering<br>MIG: Core Committee Meeting<br>SVP: AC Meeting |
| 9-11 | | Forane Priests' Conference |
| 12 | Thu | St. Alphonsa College, College Day |
| 13 | Fri | St. Alphonsa College, Graduation Day |
| 14 | Sat | MJ: Retreat for Mothers<br>CRI: Monthly Recollection<br>MIG: Online Way of the Cross<br>TM: Bible convention at Vanchinagar<br>PC: Reels Competition for Youth and Catechism Students |
| 15 | Sun | CAT: BTCT CAT: Second Semester Examination (Pre Kg – std IX) at Parishes STI: Class EIRD: Christian Unity Retreat |

| | | |
|---|---|---|
| 16 | Mon | FA: Doctor's Visit |
| 20 | Fri | MS: Lenten Retreat |
| 21 | Sat | KKSSS: Career Guidance |
| 22 | Sun | URM: Diocesan Level Lenten Retreat for Uraviyam Leaders at Sinai<br>SMYM: Animators Meet<br>STI: Class<br>SVP: Lenten Retreat |
| 24 | Tue | HC: Free Medical Camp |
| 28 | Sat | SINAI: Retreat in preparation for Easter<br>MJ: Drama Competition |
| 29 | Sun | Palm Sunday<br>KII: Forane Level Monthly Activity<br>SMYM: Taize Prayer |
| 30 | Mon | Vestition and Minor Orders @ Minor Seminary, Mukkoottukal |
| 31 | Tue | Diaconate Ordination @ Manjalumoodu |

FR. JOSE MUTTATHUPADAM, PROTOSYNCELLUS

| BIRTHDAY OF REV. FATHERS - MARCH - 2026 | |
|---|---|
| FR. JOSEPH SANTHOSH | 03 |
| FR. JIJI PUTHENPURACKAL | 05 |
| FR. MATHEW THEKKEKUTT | 15 |
| FR. THOMAS POWATHUPARAMPIL | 15 |
| FR ISAAC KURICHIEL | 16 |
| FR. GEORGE KALANGARA SDB | 18 |
| FR. THOMAS SATHIANESAN | 20 |
| FR. ANTONY MAHESH | 28 |

## BISHOP'S ENGAGEMENTS - MARCH 2026

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sun | | Mukkadal: Prayer Day |
| 2 | Mon | 09.00 am | Bishop's House: Forane Vicars Meeting |
| 3 | Tue | | Changanacherry |
| 4 | Wed | | Changanacherry \| Kottayam: |
| 5 | Thu | | Kottayam: Seminary visit\| Palai >> Kanjirappally |
| 6 | Fri | | Kothamangalam >> Aluva |
| 7 | Sat | | Aluva: Seminary Visit >> Ernakulam >> Angamaly |
| 8 | Sun | | Irinjalakuda >> Thrissur: Seminary visit |
| 9 | Mon | | Thrissur |
| 10 | Tue | | >> Thuckalay |
| 11 | Wed | 10.00 am | Bishop's House: Finance Council Meeting |
| 12 | Thu | 09.00 am | Soosaipuram: St. Alphonsa College Day |
| | | 05.00 pm | Paruthivilai: Santhi Nilayam Annual Day |
| 13 | Fri | 10.00 am | Soosaipuram: College Graduation Day. >> Viluppuram |
| 14 | Sat | 10.00 am | Viluppuram: Death Anniversary Holy Qurbana |
| 15 | Sun | | Pondicherry: Holy Qurbana |
| 16 | Mon | | Pondicherry >> Thuckalay |
| 17 | Tue | 05.00 pm | Palappallam: Jyothi Nilayam School Annual Day. |
| 18 | Wed | 05.00 pm | Kazhuvanthittai: Nambikai Aalayam School Annual Day. |

இறையருள்
08/03/2023

| | | | |
|---|---|---|---|
| 19 | Thu | 07.00 am<br>05.30 pm | Soosaipuram: St. Joseph Feast ay Holy Qurbana<br>Kurusumala: Holy Qurbana |
| 20-23 | Fri-Mon | | Indore >> Bopal>> Ujjain |
| 24 | Tue | 04.30 pm | Nitravilai: Karunai Illam School Annual Day. |
| 25 | Wed | | Bishop's House: Curia meeting |
| 26 | Thu | 06.30 pm | Virudhunagar: Baptism& Chrismation >> Idukki |
| 27 | Fri | 09.00 am | Idukki: Diocese' Lenten Pilgrimage |
| 28 | Sat | 11.00 am | Thodupuzha: Death Anniversary Holy Qurbana |
| 29 | Sun | | Fathimapuram: Palm Sunday Holy Qurbana |
| 30 | Mon | 07.00 am | Minor Seminary: Vestition & Minor orders |
| 31 | Tue | 5.00 pm | Manjalumoodu: Diaconate Ordination |

**FR. SUNIL ANTONY, SECRETARY TO BISHOP**

**சீனாய் தியான இல்ல சிலுவைப் பாதை நிலையங்கள் மந்திரிப்பு**

மறைமாவட்டத்தின் தியான இல்லமாக விளங்குகின்ற சீனாய் தியான இல்லத்தின் சுற்றுப்புறத்தில் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பாடுகளை நினைவு கூரும் பொருட்டு சிலுவைப்பாதையின் 14 நிலைகள் நிறுவப்பட்டு பிப்ரவரி 28- ம் தேதி மக்கள் பயன்பாட்டிற்காக ஆயர் அவர்களால் மந்திரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சி காலை 10.00 மணியளவில் ஜெபமாலையுடன் தொடங்கியது, அதைத் தொடர்ந்து இறைபுகழ்ச்சி மற்றும் ஆராதனை நடைபெற்றது. மதியம் 1:00 மணிக்கு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து ஆயர் அவர்களால் சிலுவைப் பாதை நிலையங்கள் ஆசீர்வதிக்கப்பட்டு, மதிய உணவுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

**2 FEB 2026**



Kayathar: Extended territory missionaries meet

**10 FEB 2026**



Priests ongoing formation programme at Sangamam

**16 FEB 2026**



**Ash Monday Holy Qurbana at Kaisalavilai**

**28 FEB 2026**



**Holy Qurbana and blessing at Sinai Retreat Center**

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay Published by: Media Department of the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175 Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570